வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.1050/அ3/2022 நாள் 09.04.2022

---

**பொருள் :** பள்ளிக் கல்வி – 2021–2022ம் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு – மனமொத்த மாறுதல் / அலகு விட்டு அலகு விண்ணப்பங்கள் கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் மற்றும் முன்னுரிமை ஒன்றியம்(Priority Block) விவரம் வெளியிடுதல் – தொடர்பாக.

**பார்வை :** சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண். 00701/சி3/இ1/2022, நாள் 06.04.2022.

--------

2021–22ஆம் கல்வியாண்டிற்கு அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு நெறிமுறைகள் சார்பாக அரசாணை வெளியிடப்பட்டு அனைத்துவகை ஆசிரியர்கள் மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கலந்தாய்வு நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மனமொத்த மாறுதல் கோரும் (Mutual Transfer) ஆசிரியர்களுக்கான கலந்தாய்வும், அலகு விட்டு அலகு மாறுதல் (Unit Transfer) மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கு மாறுதல் கோருபவர்களுக்கான கலந்தாய்வும் கல்வி தகவல் மேலாண்மை முறைமை EMIS இணையதள வழியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மனமொத்த மாறுதல் மற்றும் அலகு விட்டு அலகு மாறுதல் கோரும் ஆசிரியர்களுக்கு வழிக்காட்டு நெறிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னுரிமை ஒன்றியங்களுக்கு மாறுதல் பெறும் ஆசிரியர்கள் 3 ஆண்டுகள் அவ்வொன்றியத்தில் பணிபுரிந்தால் அவர்களுக்கு அடுத்து வரும் (31.12.2024க்கு பின்) பொது மாறுதல் கலந்தாய்வில் முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது, இதன் சார்ந்து அனைத்து பள்ளி ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி தகவல் தெரிவிக்க அனைத்து அரசு / நகராட்சி / மாதிரி உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு –**

பள்ளிக் கல்வி ஆணையரக வழிகாட்டு நெறிமுறைகள் ஓம்……..

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**வேலூர்**

**பெறுநர்**

அனைத்து அரசு / நகராட்சி / மாதிரி உயர் / மேல்நிலைப் பள்ளி
தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

**நகல்**

மாவட்டக் கல்வி அலுவலர்., வேலூர்.